செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 424. நாள்: 18/7/17

# பத்திரிகைச் செய்தி

***வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கு***

ஓர் அன்பான வேண்டு கோள்!

நமது மாவட்டத்தில் தற்போது நடப்பு பருவத்தில் விவசாயிகள் நெல் நாற்றங்கால் விடுவதற்கு தயாராகும் நிலையில்,வெளிமாநிலங்களில் இருந்து நெல் விதைகள் அதிக அளவில் வரப்பெற்றுள்ளதால் விவசாயிகள் விதைகள் வாங்கும் போது கீழ்கண்ட வழிமுறைகளை தவறாது கடைப்பிடித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1) அச்சடிக்கப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் விலை கொடுத்து வாங்க வேண்டாம்
2) விலைப்பட்டியல் கட்டாயம் கேட்டு பெறவும்.
3) விலைப்பட்டியலில் பயிர்/ ரகம்/ குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிட்டு பெற்றுக்கொள்ளவும்.
4) சாகுபடி பருவம் மற்றும் தமிழ் நாட்டில் சாகுபடிக்கு பரிந்துரைக்கபடுகிறதா என விபர அட்டையில் அச்சிடப்பட்டுள்ளதா என பார்த்து வாங்கவும்.
5) வெளி மாநில சான்று பெற்ற விதைக்கு விதை பரிசோதனை நிலைய ஆய்வறிக்கையும்,படிவம்-2-ம் இருக்கிறதா என சரிபார்த்து வாங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6) மேலும் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யும் வியாபாரிகள மற்றும் விலைப்பட்டியல் கொடுக்க மறுக்கும் வியாபாரிகள் மீது விதை சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இது சம்மந்தமான புகார்களுக்கு கீழ்கண்ட அலுவலகத்திற்கு தொடர்பு கொள்ளவும்

அலுவலக முகவரி

விதை ஆய்வுத் துணை இயக்குநர்,
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகம்,
2 – ம் தளம், சிவராமபுரம்,
( தந்தை பெரியார் தொழில் நுட்பக் கல்லூரி எதிரில்),
வேலூர் 632 002. (தொலைபேசி எண். 0416 – 2264562)

17/7/17

விதை ஆய்வுத் துணை இயக்குநர்,
வேலூர்

செ.ம.தொ.அ 18/7/17
வேலூர்- 9.